மதுராந்தகம், தாராபுரத்தில் இன்று வாக்குப்பதிவு...

முதல் பக்க தொடர்ச்சி

22 பேர் போட்டியில் உள்ளனர். திமுக வேட்பாளர் சுகன்யா, தவெக வேட்பாளர் சத்தியபாமா, அதிமுக வேட்பாளர் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் லட்சுமணன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகா ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாக உள்ளனர்.

அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, பணம் வாங்கி ராஜினாமா செய்துவிட்டு தற்போது தவெக சார்பில் போட்டியிடும் மதுராந்தகம் தொகுதி வேட்பாளர் மரகதம் குமரவேல் மற்றும் தாராபுரம் தொகுதி வேட்பாளர் சத்தியபாமா ஆகியோர் வாக்கு சேகரிக்க சென்ற பல இடங்களில் பொதுமக்கள் தங்கள் பகுதிக்குள் வாக்கு கேட்டு வரக்கூடாது என்று உள்ளே விடாமல் விரட்டியடித்தனர். இதனால், தவெகவுக்கு தோல்வி பயம் ஏற்பட்டுள்ளது. முதல்வர் விஜய் இரண்டு தொகுதிகளிலும் நேரில் சென்று ஒரு நாள் பிரசாரம் செய்தார். ஆனாலும், எதிர்பார்த்த பலன் கிடைக்காததால், மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் மட்டும் 70 இடங்களுக்கு மேல் தெருத்தெருவாக (ரோடுஷோ) சென்று வாக்கு சேகரித்தார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் தவெக தலைவர் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று சில மணி நேரம் மட்டுமே பிரசாரம் செய்தார். ஆனால், தற்போது பிரசார வாகனத்தை விட்டு இறங்கி டீ குடிப்பது, டிராக்டர் ஓட்டுவது, முருங்கைக்காய் பறித்தது போன்ற நாடகத்தையும் அரங்கேற்றினார். 5 நிமிடம் பிரசாரம் செய்த தற்கே கொத்து பரோட்டா போட்டதாக சினிமா வசனம் பேசிய முதல்வர் விஜய், தற்போது நடைபெறும் இரண்டு தொகுதிக்கான இடைத்தேர்தலில் கூட்டமே இல்லாத இடங்களுக்கு கூட சென்று வந்தது, படம் காட்டிய செயல் அக்கட்சியின் தோல்வி பயத்தை காட்டுவதாகவும், இது திமுகவுக்கு கிடைத்த வெற்றி என்றும் அக்கட்சி தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தனிப்பெரும்பான்மை இல்லாமல் தவெக ஆட்சி நடத்தி வரும் நிலையில், இந்த இடைத்தேர்தலின் வெற்றி தமிழக அரசியல் களத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து பரபரப்புகளுக்கும் விறுவிறுப்புகளுக்கும் பஞ்சமில்லாமல் தேர்தல் பிரசாரம் நடைபெற்றது. வேட்பாளர்கள் மட்டுமல்லாமல் அரசியல் கட்சி தலைவர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், சீமான், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் என அரசியல் தலைவர்கள் அனைவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். மு.க.ஸ்டாலின் மதுராந்தகத்தில் தனது பரப்புரையை முடித்தார். கடைசி நாளான நேற்று முன்தினம் தாராபுரம் தொகுதியில் முதல்வர் விஜய் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்த இடைத்தேர்தலின் பிரசாரம் ஓய்ந்துள்ள நிலையில், வாக்காளர்கள் அல்லாத வெளியூரை சேர்ந்த அரசியல் கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரும் இரு தொகுதிகளையும் விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். திருமண மண்டபங்கள், லாட்ஜ்கள் உள்ளிட்ட தங்குமிடங்களில் தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல்துறை தீவிர சோதனை மேற்கொண்டனர். மேலும், வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. சிசிடிவி கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடைத்தேர்தல் இன்று நடைபெற உள்ள நிலையில், இந்த இரு தொகுதிகள் முழுவதும் காவல்துறையினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இடைத்தேர்தலுக்கு எந்தவித இடையூறும் ஏற்படுத்தாத வகையில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை காவல்துறையினர் எடுத்துள்ளனர். தேர்தல் அதிகாரிகளும் இந்த இரண்டு தொகுதிகளுக்கான வாக்குப்பதிவிற்காக தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இரண்டு தொகுதிகளிலும் உள்ள வாக்குப்பதிவு மையங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், தேர்தலுக்கு பயன்படுத்தும் அழியாத மை உள்ளிட்ட பொருட்கள், வாக்குச்சாவடி அலுவலர்கள் அந்தந்த மையங்களுக்கு வந்து சேர்ந்தனர். இன்று காலை 6 மணிக்கு அனைத்து அரசியல் கட்சி ஏஜென்ட் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடக்கிறது. இதையடுத்து இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடக்கிறது. தேர்தல் நேரத்தில் அசம்பாவித சம்பவம் எதுவும் ஏற்படாமல் இருக்க பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு முடிந்ததும், வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்படும். பின்னர், வருகிற 9ம் தேதி (வெள்ளி) காலை 8 மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்கும். அன்றைய தினம் காலை 9 மணி முதல் முன்னணி நிலவரம் தெரியவரும்.

பதற்றமான வாக்குச்சாவடிகள் எத்தனை?

தாராபுரம் (தனி) தொகுதியில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அளிப்பதற்காக 320 வாக்குச்சாவடிகள் தயார் நிலையில் உள்ளன. இதில், 18 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டு அங்கு மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு அளிக்கின்றனர். இடைத்தேர்தலுக்காக அரசின் பல்வேறு துறை சார்ந்த 1,450 அலுவலர்கள் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மதுராந்தகத்தில் உள்ள 285 பூத்துகளில் போலீஸ் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். அதன் அடிப்படையில் 2614 போலீசார் தீவிர பாதுகாப்பணியில் ஈடுபடுகின்றனர். 55 பதற்றமான வாக்கு சாவடிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்காக கூடுதல் போலீசார் நியமித்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

2 தொகுதிகளில் மட்டும் இன்று பொது விடுமுறை

தமிழக தலைமை செயலாளர் சாய்குமார் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறி இருப்பதாவது: செங்கல்பட்டு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுராந்தகம் (தனி) தொகுதி மற்றும் திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட தாராபுரம் (தனி) என இரண்டு தொகுதிகளில் இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி இந்த இரண்டு தொகுதியில் இடைத்தேர்தல் நடக்கும் பகுதிகளுக்கு மட்டும் பொது விடுமுறை அளிக்கப்படுகிறது. அதன்படி, இந்த இரு தொகுதிகளின் எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு 6ம் தேதி (இன்று) பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதிகளில் வாக்காளர்களாக பதிவு செய்து, செங்கல்பட்டு, திருப்பூர் மற்றும் அதன் அண்டை மாவட்டங்களில் பணிபுரியும் தனியார் நிறுவன ஊழியர்களும் தங்களின் ஜனநாயக கடமையை ஆற்ற ஏதுவாக சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பதக்கம் வென்றவர்களுக்கு வாழ்த்து

▶ சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று நடந்த நிகழ்வில், ஜப்பான் ஆசிய விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்று தாயகம் திரும்பிய தமிழக வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, வேலவன் செந்தில்குமார், ஷமீனா ரியாஸ், ராஜேஷ் ரமேஷ் ஆகியோருக்கு அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார். அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை செயலாளர் சந்தீப் நந்தூரி, எஸ்டிஏடி உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் உயர் அதிகாரிகள்.

‘அண்ணன் சீர்’ திட்டத்துக்கு ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு

சென்னை, அக். 6: தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் புதிதாக திருமணம் செய்துகொள்ளும் மணப்பெண்களுக்கு உதவக்கூடிய வகையில், தமிழக அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ‘அண்ணன் சீர்’ திட்டம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு அதற்கான அரசாங்க ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஒவ்வொரு மணப்பெண்ணுக்கும் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமும், திருமணத்திற்கான ஒரு பட்டுப் புடவையும் அரசால் இலவசமாக வழங்கப்படும். முதற்கட்டமாக இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் முழுமையாகச் செயல்படுத்துவதற்காக ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பயன்பெற விரும்புவோர் இணையதளம் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென பிரத்யேகமான அரசு இணையதளம் மிக விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. பொருளாதார ரீதியாகக் குடும்பங்களுக்கு சுமை ஏற்படாமல் இருக்கவும், சொந்த அண்ணன் ஸ்தானத்தில் இருந்து அரசே இந்த சீர்வரிசைகளை வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களின் திருமணச் செலவுகளை கணிசமாகக் குறைத்து, பெண்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் இந்த “அண்ணன் சீர்” திட்டம் தமிழக மக்கள் நலப் பயணத்தில் ஒரு முக்கிய திட்டமாக பார்க்கப்படுகிறது. இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வே

மதுரைக் கோட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: U-E-OT-2026-16

நாள்: 30.09.2026

முதுநிலைக் கோட்ட மின் பொறியாளர், பொதுச் சேவை, தெற்கு ரயில்வே, மதுரை - அவர்கள், இந்திய யூனியன் குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் பணிக்காக, மின்-ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். தகுதியுள்ள ஒப்பந்தப்புள்ளியர்கள் / விலைப்புள்ளியர்கள் ஒப்பந்தப்புள்ளி மூடும் நேரமான 22.10.2026 பிற்பகல் 14.00 மணி வரை தங்கள் ஆஃபர்களை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம். மேனுவல் முறையில் ஆஃபர்களைச் சமர்ப்பித்தல், அனுமதிக்கப்படாது. ஒப்பந்தப்புள்ளி மூடும் நேரத்திற்குள் அப்படி ஏதாவது மேனுவல் ஆஃபர்கள் பெறப்பட்டிருந்தாலும், மொத்தமாக புறக்கணிக்கப்படும்.

வ. எண்	ஒப்பந்தப்புள்ளி எண் & பணியின் பெயர்	சராசரி ஒப்பந்தப் புள்ளி மதிப்பு (₹)	விலைப் புள்ளி பாதுகாப்புத் தொகை (₹)	பணி முடிக்கும் காலம்
1	**U-E-OT-2026-16-01:** - மதுரைக் கோட்டம்: மதுரை, திருநெல்வேலி மற்றும் இராமேஸ்வரம் கோச்சிங் டிப்போக்களில், நடைமேடை நீட்டிப்புக்காக, மின் ஆற்றல் வழங்குதல் மற்றும் ஒளிவிளக்கு ஏற்பாடுகள், கூடுதல் நடைமேடைக் கூரையை ஏற்படுத்துதல், பல்வேறு அமைவிடங்களில் பணியாளர் குடியிருப்புகளுக்கு மறு-வயரிங் (rewiring) செய்தல் மற்றும் பிட்-லைனில் (pit line) ஒளிவிளக்குகள் பராமரித்து பழுதுநீக்குதல் (Repair attention of lights)	8,29,79,463/-	16,59,600/-	06 மாதம்

மூடும் நாள் மற்றும் நேரம்: **22.10.2026 பிற்பகல் 14.00 மணி.** மேலும் விவரங்களுக்கு **https://www.ireps.gov.in** என்ற இணையதளத்தை அணுகலாம்

முதுநிலைக் கோட்ட மின் பொறியாளர் /
பொதுச் சேவை, மதுரை – 16

Karur Vysya Bank
Smart way to bank

சொத்து வசூல் கிளை
புதிய எண்.2/1 மற்றும் 2/2, 1வது தளம், அங்காடி தெரு,
வெங்கடேசபுரம் காலனி, அயனாவரம், சென்னை - 600023
e-Mail ID: arbchennai@kvbmail.com Mob: 89398 69789

அசையா சொத்து விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை ***கரூர் வைஸ்யா வங்கி, ஆவடி கிளையின்*** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ***ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில்*** எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்தொகையான ₹ **12,04,03,725.82** (ரூபாய் பன்னிரண்டு கோடியே நான்கு லட்சத்து மூன்றாயிரத்து எழுநூற்று இருபத்து ஐந்து மற்றும் பைசா எண்பத்து இரண்டு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை ***"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"*** என்ற அடிப்படையில் **31.10.2026** அன்று விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் & ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: 1.M/s.காமதேனு ஜூவல்லரி பிரைவேட் லிமிடெட், அதன் சார்பாக இயக்குனர்கள் i) Mr.M.விஷ்ணு சர்மா, ii) Mr.V.விவேக் சர்மா, அலுவலக முகவரி: எண்.68, HIG-1, நொளம்பூர் மெயின் ரோடு, முகப்பேர் மேற்கு, சென்னை-600 037, தற்போதைய முகவரி: எண்.201, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சின்னம்மன் கோயில் அருகில், ஆவடி, சென்னை - 600054, **நிர்வாக இயக்குனர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்: 2.Mr.M.விஷ்ணு சர்மா,** S/o.Mr.மோகன்லால் சர்மா, **இயக்குனர் / ஜாமீன்தாரர்: 3.Mr.V.விவேக் சர்மா,** S/o.Mr.M.விஷ்ணு சர்மா, **இயக்குனர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்: 4.Mr.V.வினோத் சர்மா,** S/o Mr.M.விஷ்ணு சர்மா, **ஜாமீன்தாரர்கள்: 5.Mrs.சமீத் சர்மா என்கிற Mrs.சம்மத் பாய் சர்மா,** W/o.Mr.M.விஷ்ணு சர்மா, **6.Mrs.ஷர்மிளா சர்மா,** W/o.Mr.V.வினோத் சர்மா, எண்கள்.2 முதல் 6 வரை உள்ளவர்களின் **குடியிருப்பு முகவரி:** எண்.201, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சின்னம்மன் கோவில் அருகில், ஆவடி, திருவள்ளூர் – 600 054

அசையா சொத்துக்கள் விவரம்

ஐட்டம் எண்கள். 1 மற்றும் 2-ன் மொத்த பரப்பு 9719 சதுர அடி குடியிருப்புடன் கூடிய வணிக நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும்

விவரங்கள் பின்வருமாறு:

ஐட்டம் எண்.1: நிலத்தின் பரப்பு 4578 சதுர அடி. ஆவடி நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.158/1C1 & சர்வே எண்.69/4, பருத்திப்பட்டு கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் உள்ள சொத்து. Mr.M.விஷ்ணு சர்மா பெயரிலுள்ளது.

பகுதி 1: மொத்தமுள்ள 4578 சதுர அடியில் கிழக்கு பகுதியில் 1980 சதுர அடி நிலம். எல்லைகள்: வடக்கு: சின்னம்மன் கோயில் தெரு, தெற்கு: வெங்கடபதி நாயுடு-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: ஆவடி பூந்தமல்லி ரோடு, மேற்கு: G.பாஸ்கர் நாயுடு மீதமுள்ள சொத்து. நிலத்தின் அளவுகள்: வடக்கு பக்கம் 60 அடி, கிழக்கு பக்கம் 33 அடி, தெற்கு பக்கம் 60 அடி, மேற்கு பக்கம் 33 அடி. **இதில் வீட்டு கட்டிடம், வீட்டின் கதவு எண்.201, EB சர்வீஸ் எண்.49-105-443, சொத்து வரி மதிப்பீடு எண்.48155.**

பகுதி 2: மொத்தமுள்ள 4578 சதுர அடியில் மேற்கு பகுதியில் 2598 சதுர அடி நிலம். எல்லைகள்: வடக்கு: பிள்ளையார் கோயில் தெரு, தெற்கு: வெங்கடபதி நாயுடு-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: Mr.விஷ்ணு சர்மா-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: பெரியசாமி நாடார்-க்கு சொந்தமான சொத்து. நிலத்தின் அளவுகள்: வடக்கு பக்கம் 78½ அடி, கிழக்கு பக்கம் 33 அடி, தெற்கு பக்கம் 78½அடி, மேற்கு பக்கம் 33 அடி.

ஐட்டம் எண்.2: ஆவடி நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.158/1C2, கிராம நத்தம் சர்வே எண்.69/4, TS எண்.85, பட்டா எண்.443, கதவு எண்.3, பூந்தமல்லி ஆவடி நெடுஞ்சாலை, பருத்திப்பட்டு கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் **பகுதி 1 மற்றும் பகுதி 2-ன் மொத்த பரப்பு 5141 சதுர அடி நிலம் மற்றும் தரை மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட குடியிருப்பு உடன் கூடிய வணிக கட்டிடம்.**

பகுதி 1 = 3798 சதுர அடி (2411 சதுர அடி + 1387 சதுர அடி) . எல்லைகள்: வடக்கு: பாஸ்கர் நாயுடு -க்கு சொந்தமான நிலம், தெற்கு: 6 அடி பொது பாதை மற்றும் லோகநாயக்கர் சொத்து, கிழக்கு: Mr.பாஸ்கர் நாயுடு-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: மாசிலாமணி நாயக்கர்-க்கு சொந்தமான சொத்து. அளவுகள்: வடக்கு பக்கம் 21½ அடி, கிழக்கு பக்கம் 64 அடி, தெற்கு பக்கம் 21½ அடி, மேற்கு பக்கம் 65 அடி. **ஆக மொத்தம் 1387 சதுர அடி.** அளவுகள்: வடக்கு பக்கம் 41 அடி, கிழக்கு பக்கம் 55½அடி, தெற்கு பக்கம் 44 அடி, மேற்கு பக்கம் 58 அடி. **ஆக மொத்தம் 2411 சதுர அடி.**

பகுதி 2 = 1343 சதுர அடி (832.5 சதுர அடி + 177.5 சதுர அடி + 333 சதுர அடி). எல்லைகள்: வடக்கு: பாஸ்கர் நாயுடு-க்கு சொந்தமான நிலங்கள், தெற்கு: 6 அடி பொது பாதை, கிழக்கு: Mr.ஜெகன்நாதன்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: சர்வே எண்.158/1C2. **பிட் 1:** அளவுகள்: வடக்கு பக்கம் 15 அடி, கிழக்கு பக்கம் 15 அடி, தெற்கு பக்கம் 55½ அடி, மேற்கு பக்கம் 55½ அடி. **ஆக மொத்தம் 832.5 சதுர அடி. பிட் 2:** அளவுகள்: வடக்கு பக்கம் 5 அடி, கிழக்கு பக்கம் 35½ அடி, தெற்கு பக்கம் 5 அடி, மேற்கு பக்கம் 35½ அடி. **ஆக மொத்தம் 177.5 சதுர அடி. பிட் 3:** அளவுகள்: வடக்கு பக்கம் 5 அடி, கிழக்கு பக்கம் 55½ அடி, தெற்கு பக்கம் 7 அடி, மேற்கு பக்கம் 55½ அடி. **ஆக மொத்தம் 333 சதுர அடி.** எல்லைகள்: வடக்கு: பாஸ்கர் நாயுடு-க்கு சொந்தமான நிலங்கள், தெற்கு: 6 அடி பொது பாதை, கிழக்கு: S.F.எண்.69/4, மேற்கண்ட பிட் 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்கு: மோகனா நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 10,00,00,000/-	டேவணித்தொகை (EMD)	₹ 1,00,00,000/-	ஏல உயர்வுத்தொகை	₹ 5,00,000/-

சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்: 06.10.2026 முதல் 30.10.2026 வரை
காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும்.

இ-ஏல விண்ணப்ப படிவங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டிய
கடைசி தேதி & நேரம் 30.10.2026 அன்று மாலை 5.00 மணி வரை

இ-ஏலத் தேதி மற்றும் நேரம் **31.10.2026** அன்று மாலை **03:00** மணி முதல் **04.00** மணி வரை
விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 10 நிமிட காலவரையற்ற நீட்டிப்புகளுடன்
இ-ஏலமானது **https://assets.matexauctions.com**-என்ற இணையதளத்தின் வாயிலாக நடைபெறும்

Nodal Bank Account Name: The Karur Vysya Bank Ltd., Central Office Bid Collection,
Account Number: 1101351000000973, IFSC Code: KVBL0001101,
EMD for the account of M/s.Kamadhenu Jewellery Private Limited

தொடர்புகொள்ள வேண்டிய நபர் & தொலைபேசி எண்: உதவி பொது மேலாளர் - 89398 69789,
99426 06507, 89196 74448. e-Mail: arbchennai@kvbmail.com

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: www.kvb.co.in/Property Under Auction சொத்தினை ஏலம் விடும் இணையதள முகவரி: **https://assets.matexauctions.com** சேவை வழங்குனர் **M/s. Matex Net Pvt. Ltd.**

SARFAESI சட்டம், 2002 விதி 9(1)-ன்கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு

மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை **31.10.2026** இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து இ-ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன்பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி, இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி : 03.10.2026
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

தெற்கு ரயில்வே

சென்னைக் கோட்டம்

மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

எண்: MAS/EGS/ET/31/2026-2027, நாள்: 30.09.2026

1) **பணியின் பெயர்:** சென்னைக் கோட்டத்தில், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு (S&T) அமைவிடங்களில் நிறுவப்பட்ட ஸ்பிளிட் குளிரூட்டிகளை (Split Air Conditioners), சரிசெய்வதற்கான (rectification) முன்னறிவிப்பு

2) மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: **MAS/EGS/ET/31/2026-2027,** நாள்: **30.09.2026**

3) ஒப்பந்தப்புள்ளி எண்: **ME-29-II-REV-OT-269-2026.**

4) பணியின் தொகை மதிப்பு: ₹ **39,10,563** (முப்பத்து ஒன்பது லட்சத்து, பத்தாயிரத்து, ஐநூற்று அறுபத்து மூன்று ரூபாய் மட்டும்).

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான மேலும் விவரங்களை **www.ireps.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

முதுநிலைக் கோட்ட மின் பொறியாளர், பொது, சென்னை

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

திருக்கழுக்குன்றம் கிளை: எண்.32, கம்மாளர் தெரு, 1வது தளம்,
ICICI பேங்க் மாடியில், திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு மாவட்டம்-603 109

கோரிக்கை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு ஒன்று **கடன்தாரர்: 1.ரேவதி.S,** W/o.செந்தாமரை கண்ணன், **குடியிருப்பு முகவரி,** எண்.134, கொய்யாத்தோப்பு, குழிப்பந்தண்டலம், மானாமதி (அஞ்சல்), திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்-603105 **2.செந்தாமரை கண்ணன்,** S/o.துரைசாமி, **குடியிருப்பு முகவரி,** எண்.134/137, கொய்யாத்தோப்பு, குழிப்பந்தண்டலம், மானாமதி (அஞ்சல்), திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்-603105 **மேலும் முகவரி,** எண்.36, அழகேசன் நகர், செங்கல்பட்டு தாலுகா & மாவட்டம் - 603001 ஆகியோருக்கு பதிவு அஞ்சல் மூலமாக **11.08.2026** அன்று அனுப்பப்பட்டது.

பொருள்: M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், திருக்கழுக்குன்றம் கிளையில் வைத்துள்ள **முறையான அடமான கடன் கணக்கு எண். KALPAKO702140002 தொடர்பாக.**

NPA தேதி: 31.07.2018

நீங்கள் மேற்படி கடன் கணக்குகள் தொடர்பாக **11.08.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை** ₹ **19,83,241/-** (ரூபாய் பத்தொன்பது லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்று மட்டும்) மற்றும் **12.08.2026** முதல் அத்தொகை செலுத்தப்படும் வரையான ஒப்புக்கொள்ளபட்ட வீதத்தில் மேல் வட்டியையும் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள். மேற்படி சட்டத்தின் கீழ் கம்பெனியானது **11.08.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை** ₹ **19,83,241/-** செலுத்துமாறு கோரி **11.08.2026 அன்று அறிவிப்பு ஒன்றை உங்களுக்கு அனுப்பியது.**

உங்களில் **1வது மற்றும் 2வது நபருக்கு பதிவு அஞ்சலில் ஒப்புகைச்சீட்டுடன் அனுப்பப்பட்ட அந்த அறிவிப்பு "அவர்களின் முகவரியில் நபர் இல்லை"** எனவே, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கடன் நிலுவைத்தொகை **11.08.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை** ₹ **19,83,241/-** (ரூபாய் பத்தொன்பது லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்று மட்டும்) மற்றும் **12.08.2026** முதல் அத்தொகை செலுத்தப்படும் தேதி வரையான வட்டியையும் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் உங்களிடம் கோரப்படுகிறது. தவறினால் கிழ்காணும் அட்டவணையில் உள்ள கடனுக்கு ஈடான அடமான சொத்து மீது கம்பெனி தமக்குள்ள அமலாக்க அதிகாரத்தை, உரிமையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு இருக்கும் இதர எந்தவொரு உரிமைக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது.

அதாவது தற்போது DRT/RO-DRT/DRAT/நீதிமன்றம் முன்னிலையில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகளுக்கும் பெறப்பட்ட / பெறப்படவுள்ள ஆணைகள் / தீர்ப்பு ஆணைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு கம்பெனிக்கு இதர எந்தவொரு இருக்கும் உரிமைகளுக்கு பாதகமின்றியும் இந்த அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

சொத்தானது (I) Mr.செந்தாமரை கண்ணன்-க்கு சொந்தமான சொத்து (விற்பனை பத்திர ஆவண எண்.3613 / 2010).

செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.495/4, **குழிப்பந்தண்டலம் கிராமம், திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் **0.30 சென்ட் அல்லது 13080 சதுர அடி புஞ்சை நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: காசி நாயக்கர் நிலம், தெற்கு: சர்வே எண்.495/3-ல் உள்ள துரைசாமி நாயக்கர் மீதமுள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.496-ல் உள்ள ஏரைக்கரை புறம்போக்கு (கொய்யாத்தோப்பு கிராம ரோடு), மேற்கு: சர்வே எண்.494/5-ல் உள்ள துரைசாமி நாயக்கர் மீதமுள்ள நிலம்.

தேதி: 11.08.2026, இடம்: **திருக்கழுக்குன்றம்** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்**

தெற்கு ரயில்வே

சென்னைக் கோட்டம்

விண்ணப்பம் பார்வை எண்: M/C. 210/Halt/2026,

நாள்: 30.09.2026

முதுநிலைக் கோட்ட வர்த்தக மேலாளர், தெற்கு ரயில்வே, சென்னைக் கோட்டம், சென்னை - 600003 அவர்களால், இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, வ.உ.சி நகர் (VOC) மற்றும் நந்தியம்பாக்கம் (NPKM) ஹால்ட் நிலையங்களில் ஹால்ட் முகவரை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பம் பார்வை எண்	பணியின் பெயர்	அமைவிடம்	காலம்
M/C. 210/Halt/2026	வ.உ.சி நகர் (VOC) ரயில் நிலையத்தில், ஹால்ட் முகவரை நியமிப்பதற்கான விண்ணப்பம்	தொண்டையார் பேட்டை மற்றும் திருவொற்றியூர் ரயில் நிலையங்கள் இடையே	5 ஆண்டு
	நந்தியம்பாக்கம் (NPKM) ரயில் நிலையத்தில், ஹால்ட் முகவரை நியமிப்பதற்கான விண்ணப்பம்	அத்திப்பட்டு மற்றும் மீஞ்சூர் ரயில் நிலையங்கள் இடையே	
விண்ணப்பப் படிவம் வாங்க வேண்டிய அலுவலக முகவரி	கோட்ட ரயில்வே மேலாளர், வர்த்தகம், NGO இணைப்பு, 2’வது தளம், பூங்காநகர், தெற்கு ரயில்வே, சென்னை - 600003		
விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள் மற்றும் நேரம்	**29.10.2026 (வியாழன்) காலை 10.00 மணி முதல் பிற்பகல் 14.00 மணி இடையே**		
விண்ணப்பப் படிவம் திறப்பு	**29.10.2026 (வியாழன்) பிற்பகல் 14.30 மணி**		
இணையதள முகவரி (விரிவான தகவல்களுக்கு)	**www.sr.indianrailways.gov.in**		

விண்ணப்பங்களை ஏற்கும் நாளும், விண்ணப்பங்களை திறக்கும் நாளும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட நேரிட்டால், இதே செயல்கள் அடுத்த பணி நாளில் நிறைவேற்றப்படும்.

கோட்ட ரயில்வே மேலாளர், வர்த்தகம்,
சென்னைக் கோட்டம், சென்னை - 600003

ஷிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 501, சால்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புது டெல்லி–110025
CIN:U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

ஷிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெடின் பின்வரும் கடன்தாரர்களுக்கு தெரிவிக்கப்படுவது என்னவென்றால், அவர்களால் வங்கியிலிருந்து பெறப்பட்ட தங்க கடன்/கள் தொடர்பாக இதுவரை அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அதிலும் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டபோதிலும் அவர்கள் கடன் தொகையை திருப்பித் தரவில்லை. அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், வங்கியில் கடனீடாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கடன் பெறப்பட்ட வங்கிக் கிளையில் காலை **11:00** மணிக்கு ஏலம் விடப்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்கள், கணக்கை வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெரிய அளவில் இந்த ஏலத்தில் பங்கெடுக்க முடியும்.

ஏலத் தேதி 15-10-2026 @ 11:00 am

வ.எண்	கிளை	கணக்கு எண்.	கணக்கு வைத்திருப்பவர் பெயர்
1	சென்னை	104142514620	D விக்னேஷ்
2	சென்னை	104142514979	ஜெயஸ்ரீ S
3	சென்னை	104142514990	B. திரிசங்குராஜா
4	சென்னை	104142514624	ப்ரியா D
5	சென்னை	104142514628	குமார் தாஸ்
6	சென்னை	104142514718	ஜானகிராமன் மனோகர்
7	சென்னை	104142514895	S.R.குமார்
8	சென்னை	104142514891	S.R.குமார்
9	சென்னை	104142514994	ராஜேந்திரகுமார்.
10	சென்னை	104142514987	சக்தி S B

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் இந்த ஏலத்திலிருந்து எந்த கணக்கையும் நீக்கவோ அல்லது ஏலத்தை ரத்து செய்யவோ வங்கி உரிமையைப் பெற்றிருக்கிறது.

அதிகாரப்பூர்வ அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேனாம்பேட்டை கிளை
எண்.563/1, அண்ணா சாலை (தரைத்தளம்),
தேனாம்பேட்டை, சென்னை-600 018 Mob: 98435 48544
Email: cb0416@canarabank.com

Canara Bank கனரா வங்கி
A Government of India Undertaking
Syndicate சிண்டிகேட்

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 6(2) உடன் கீழ், அசையும் சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் பெற்றவர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள், சம்பந்தப்பட்ட கடன்தாரர்களால் அங்கிருந்து எடுத்துக்கொள்ளப்படாத நிலையில், **10.11.2026 அன்று (காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை) "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர்: M/s. A.G.S. ரத்னா ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட், எண்.91, பாண்டி பஜார், தி நகர், சென்னை-600 017, **இயக்குநர்கள்: G.அமுதா,** எண்.3, லஷ்மி நரசிம்மன் தெரு, தி நகர், சென்னை-600 017, **ஷ்ரவான்த்தி கணேஷ்,** எண்.16, வியாசர் தெரு, தியாகராய நகர், சென்னை-600 017, **கூடுதல் முகவரி:** எண்.3, லஷ்மி நரசிம்மன் தெரு, தி நகர், சென்னை-600 017, **ஜாமீன்தாரர்கள்: S.கணேஷ்,** எண்.2, லஷ்மி நரசிம்மன் தெரு, தி நகர், சென்னை-600 017, **M/s.கோடை வேலி வியூ ரிசார்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,** கதவு எண்கள். 8/58 & 8/59, அஞ்சல் அலுவலக சாலை, கோடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்-624 101.

அசையும் சொத்துக்கள் விவரம்

வ. எண்.	சொத்துக்களின் விவரம்	எண்ணிக்கை
1	Suitcases	1
2	Tree type brass velaku	1
3	Kamachiamman velaku	1
4	Sofa	5
5	Wall Mounting TV	30
6	Set top Box	26
7	Steel Wood Roof	2
8	Copper Vinayagar Statue	1
9	Mattress Single & Double	57
10	Steel Tea Table	2
11	Dining Table	13
12	Dining Chair	55
13	Computers	1
14	Printers	1
15	Invertors	1
16	Battery	6
17	Steel Wood Ruff	2
18	SMPS For Computer	0
19	Amplifier	0
20	Cooking Table	1
21	Pressure Cooker	2
22	Tissue Paper	5
23	Tea Flask Big	8
24	Tea Flask Small	4
25	Coffee Making Michiana	0
26	Steel Coffee Vessel Table	1
27	Commercial Gas Cylinders	0
28	Wooden Handmade Chair	60
29	Tea Table	37
30	Kettle	12
31	Steel Vessel	0
32	Room Heater	2
33	Single Cot	3
34	Kuthuvilaku	2
35	Commercial Gas Stove	2
36	Wet Grinder	2
37	Commercial Freezer Box	1
38	Solar Panel Frame	15
39	Wall Clock	1
40	Solar Water Tank	1
41	Bunker 2 Cot	34
42	Mixee	1
43	Hotel Dosa Stove	0
44	Plastic Chairs	2
45	Vinayagar Silver Kavasam	1
46	Hotel Kitchen Hold Things	1

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 1,16,500/-	டேவணித் தொகை	₹ 11,650/-	ஏல உயர்வுத்தொகை	₹ 2,000/-

இ-ஏல தேதி & நேரம் 10.11.2026 நேரம்: காலை 11.00 முதல் மதியம் 12.00 வரை (விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 5 நிமிட காலவரையற்ற நீட்டிப்புகளுடன்)

டேவணித் தொகையினை 09.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்தினை பார்வையிட தேதி மற்றும் நேரம்: 16.10.2026 காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

EMD Remittance: EMD amount of 10% of the Reserve Price is to be deposited in E-Wallet of M/s PSB Alliance Private Limited (Baanknet) portal directly or by generating the Challan therein to deposit the EMD through RTGS/NEFT in the account details as mentioned in the said challan

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணைய தளத்தில் **(www.canarabank.com)** வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் **M/s E-bkray (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No.7046612345/ 6354910172/ 8291220220/ 9892219848/ 8160205051, Email: support.ebkray@psballiance.com/ support.ebkray@procure247.com)**-ல் தொடர்பு கொள்ளவும் **முதன்மை மேலாளர், கனரா வங்கி, தேனாம்பேட்டை கிளை, (Mob: 94835 48544)** அல்லது **மண்டல அலுவலகம், சென்னை தெற்கு (Mob: 94983 46053)** எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 03.10.2026, இடம் : சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி**

OMKARA
ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91 93446 84194/ +91 98840 62068 / +91 99623 33307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]

அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட். (OARPL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை மின் ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) (ஓம்காரா PS 22/2020–21 டிரஸ்டின் டிரஸ்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 26.02.2021 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. இந்நிலையில் OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் OARPL நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் சர்ஃபாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி “உள்ளது உள்ள இடத்தில்”, “உள்ளது உள்ளபடி”, “உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்”, “திரும்பப் பெறப்பட மாட்டாது” எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)–இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் தேதி, சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏல உயர்வுத் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர் & உப கடன்தாரர்களின் பெயர் **திரு. சேதுராமன் C மற்றும் திருமதி உமயாள் S**

கடனீட்டுச் சொத்து விவரங்கள்: செங்கல்பட்டு IIஆம் இணை சார்பதிவு அலுவலகத்தைச் சேர்ந்த 15.11.2012 தேதியிட்ட விற்பனை ஆவண எண் 10948/2012– இன்படி திரு. C சேதுராமன், த/பெ. திரு. S. சந்திரசேகர் அவர்களின் சொத்து. அட்டவணை “A” சொத்து: அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம். மனை எண் 15 பாகம். அமைவிடம் ஸ்ரீ அருணாச்சல மாநகரம், மேலமணப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். மொத்தப் பரப்பளவு 548 சதுர அடிக் கொண்ட நிலம், பழைய சர்வே எண் 168/2, பட்டாப்படி புதிய சர்வே எண் 168/2A 1A2. இது செங்கல்பட்டு IIஆம் இணை சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: காலி நிலம், தெற்கு: மனை எண் 15 பாகம், கிழக்கு: 23 அடிச் சாலை, மேற்கு: மனை எண் 15 பாகம். அளவீடுகள்: வடக்குப் பக்கம் 38 அடி, தெற்குப் பக்கம் 35 அடி, கிழக்குப் பக்கம் 16 அடி, மேற்குப் பக்கம் 14 அடி,
மொத்தப் பரப்பளவு 548 சதுர அடிக் கொண்ட நிலம் மற்றும் அங்குள்ள கட்டடம் உட்பட. இது செங்கல்பட்டு IIஆம் இணை சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

சொத்தின் உரிமையாளர் **திரு. சேதுராமன் C**

13(2)–இன்கீழான அறிவிப்பு தேதி	கையக சுவாதீன தேதி	05.10.2026 நாள்படி நிலுவைத்தொகை
18.09.2019	13.09.2025	**ரூ.26,06,664/– (ரூபாய் இருபத்தாறு லட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு மட்டும்)**

நிர்ணய விலை	முன்வைப்புத்தொகை (EMD) (நிர்ணய விலையில்10%)	ஏலம் உயர்த்தும் தொகை	சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்
ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	**ரூ.45,000/– (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்)**	ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)	மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று.

கணக்கு விவரங்கள்: **கணக்கு எண் 344905000929, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 22/2020–21 டிரஸ்ட், வங்கியின் பெயர்: ICICI வங்கி, கிளை: பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC குறியீடு: ICIC0003449.**

மின் ஏல தேதி மற்றும் நேரம்:	ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்
28ஆம் தேதி அக்டோபர் 2026 (புதன்கிழமை) அன்று நண்பகல் 12:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை	26ஆம் தேதி அக்டோபர் 2026 (திங்கட்கிழமை) அன்று மாலை 04:00 மணிக்குள்.

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் மின்னணு ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடத்துவது குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கும். இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 27.08.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்கு அறிவுறுத்தும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

தேதி: 06.10.2026
இடம்: சென்னை

V M திவாகரன்
கைப்பேசி எண்: 99623 33307
அதிகாரப்பூர்வ அலுவலர்,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 22/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)